Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 414/2024

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | வனச்சரக அலுவலர் |
| பெயர். | - | பெருமாள் | வட்டம் | - | சென்னை |
| த/பெ. | | ராமசாமி | சமயம் | - | |
| கிராமம் | - | சென்னை | வயது | - | 51 |

10.10.2025

2 வது எதிரி ஆஜர்

**முதல் விசாரணை**.

1. நான் தற்போது சென்னையில் வனச்சரக அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 24.01.2016 ந் தேதி காலை 09.30 மணியளவில் உளுந்தூர்பேட்டை சரகத்தின் வனக்காப்பாளரான திரு.எம்.சங்கர் வழங்கிய தகவலின் அடிப்படையில் இருவேல்பட்டு காப்புகாடு கீழ்தணியாளம்பட்டு சுடுகாட்டு பாதை சராகத்தில் அத்துமீறி நுழைந்து 23 நடை இரட்டை டயர் மாட்டு வண்டியில் மணல் எடுத்து சேகரம் செய்து வைத்திருப்பதாக தெரிந்து நானும், என்னுடைய குழுவினரான வனக்காப்பாளர் சங்கர் மற்றும் குணசேகரன் ஆகியோருடன் அரசு ஜீப் வாகனத்தில் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டேன்.

2. பார்வையிட்டதில் குற்ற எதிரி சீத்தாராமன் த/பெ.மண்ணாங்கட்டி , கீழ்தணியாளம்பட்டு கிராமம் மற்றும் கந்தன் த/பெ. வேலாயுதம் ஆகியோர் சேர்ந்து சராகத்தில் மணல் எடுத்ததாக தெரியவந்தது. குற்ற எதிரிகள் கண்டறிந்து அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்காக முற்பட்ட போது கந்தன் அவரது வீட்டிலிருந்து தலைமறைவாகிவிட்டார். பின்பு எதிரி சீத்தாராமன் என்பவரை 24.01.2017 ந் தேதி காலை 09.30 மணியளவில் மணலை திருட்டு தனமாக சேகரம் செய்து வைத்திருந்த பகுதியில் அவரிடம் விசாரணை செய்த போது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டு வனக்காப்பாளர் திரு.சங்கர் வசம் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் என் முன்னிலையிலும், குணசேகரன் முன்னிலையிலும் வழங்கினார்.

3. குற்ற எதிரி சீத்தாராமனை கைது செய்து வனச்சரக அலுவலகத்திற்கு கொண்டு வந்து மற்ற வழக்கு ஆவணங்களை தயார் செய்து நீதிமன்ற காவலுக்கு குற்ற எதிரியை அனுப்பி வைத்தேன். எங்கள் துறையின் கேமரா மூலமாக குற்ற எதிரி கந்தன் வீட்டருகே சுமார் இரண்டு நடை மாட்டு

வண்டியில் கொட்டப்பட்ட மணலையும், மீதம் 21 நடை சுடுகாட்டு பாதையில் ரோடு போடுவதற்காக கொட்டி வைத்திருந்ததையும் சம்பவத்தில் புகைப்படம் எடுக்கப்பட்டது. **அந்த புகைப்பட நகல் அ.சா.ஆ.3 ஆகும் (புகைப்படம் நகல் என்பதால் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது**)

4. சம்பவ இடத்தில் மணல் எடுத்த இடத்தையும் எங்கள் துறையின் கேமரா மூலமாக புகைப்படம் எடுக்கப்பட்டது. இத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது படிவம்-அ தாக்கல் செய்தேன்.

__2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை__.

1. சம்பவம் நடந்த இடம் கீழ்தணியாளம்பட்டு சுடுகாட்டு பாதை சராகம். சுடுகாட்டு பாதை என்பது பொதுமக்கள் எல்லோரும் சென்று வரும் பாதை என்றால் சரிதான். பொது மக்கள் எல்லோரும் சென்று வரும் பாதை என்பதால் சுடுகாட்டு பாதை வனத்துறையினரால் பாதுகாக்கப்பட்ட பாதை இல்லை என்றால் அது தவறு.

2. சம்பவம் நடந்த பகுதி வனத்துறைக்கு சொந்தமான பாதுகாக்கப்பட்ட பகுதி என்று நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அந்த வரைபடத்தில் அரசாணை எண்32293/FRIII/86-7F&F,dt:21.10.1986 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. சம்பவம் நடந்த இடத்தில் மணல் திருட்டு நடப்பதாக எனக்கு யார், எத்தனை மணிக்கு தகவல் சொன்னார் என்றால் உளுந்தூர்பேட்டை வனச்சரக வனக்காப்பாளர் சங்கர் என்பவர் 24.01.2016 ல் அதிகாலை எனக்கு நேரில் வந்து அலுவலகத்தில் தகவல் சொன்னார்.

4. வனக்காப்பாளர் சங்கருக்கு எந்த பகுதியில் அலுவல் ஒதுக்கப்பட்டது என்றால் மலட்டாறு பீட்டு பகுதியில். அவருக்கு எத்தனை மணிக்கு அலுவலுக்கு வரவேண்டும், அவருடைய அலுவல் நேரம் என்னவென்றால் அது மாதிரி எதுவும் இல்லை, 24 மணி நேரம் பணி தான். அப்படி இருக்கையில் 23 நடை மாட்டு வண்டியில் மணல் அள்ளிய போது வனக்காப்பாளர் சங்கர் எங்கு இருந்தார் என்றால் அலுவலகத்தில் உள்ள ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும்.

5. முதல் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் 2 வது எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவத்தில் தொடர்புடைய மணல் சுடுகாட்டு பாதை அமைப்பதற்காக தான் எடுக்கப்பட்டது என்றால் மணல் எடுத்தது தவறு தான். படிவம் -அ -ல் 9 வது காலத்தில் மணல் திருட்டு தடுத்து நிறுத்தி தடய பொருட்களை கைப்பற்ற முற்பட்ட போது குற்றத்திற்கு பயன்படுத்திய தடய சொத்தை வெளி ஆட்களை கொண்டு, கூட்டமாக வந்து எடுத்துச்சென்று மறைத்துவிட்டார் என்று குறிப்பாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு கூட்டமாக வந்தவர்கள் யார் என்று விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் கூட்டமாக வந்ததால் தெரியவில்லை.

6. மகசர் என்னால் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். என் முன்னிலையில் என்னை சாட்சியாக போட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மகசரில் 3 வது காலத்தில் அரசு காப்புகாட்டில் அத்துமீறி நுழைந்து இரட்டை டயர் மாட்டு வண்டி மூலம் 5 நடை மணல் வெட்டி எடுத்து வந்து கொட்டி வைத்திருந்த குற்றம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மகசரில் 5 நடை மாட்டு வண்டி மணல் மட்டுமே இருந்ததாக சொல்லப்படும் நிலையில், மீதி மணல் எங்கே போனது என்று எனது விசாரணையில் தெரிய வந்ததா என்றால் தெரியவில்லை.

7. படிவம்-அ-ல் 2 வது எதிரி கந்தன் வீட்டிற்கு முன்பு 2 நடை மணல் கொட்டப்பட்டதாக இருந்தது, அதற்கு எந்த மகசரும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் 2 வது எதிரி வீட்டின் முன்பு எந்தவித மணலும் கொட்டவில்லை என்பதால் தான், அந்த இடத்தை பொறுத்து மகசர் தயார் செய்யவில்லை என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. எந்த எந்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்று சொல்கிறேன் என்றால் எதிரி கந்தனின் வீட்டின் முன்பு கொட்டப்பட்ட மணல் சம்மந்தமான மகசர் தாக்கல் செய்யவில்லை.

8. குறியீடு செய்யப்பட்ட புகைப்பட நகலில் காணப்படும் இரண்டு புகைப்படமும் ஒரே இடத்தை தான் குறிக்கிறது என்றால் சரிதான். அந்த இடம் கந்தனுக்கு உரிமையானது என்பதை காண்பிக்க வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த புகைப்படத்திற்கும், அந்த இடத்திற்கும், எதிரி கந்தனுக்கும் எதுவும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

9. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்களிலும் சம்பவம் நடந்தது 24.01.2016, காலை 09.30 மணி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 09.30 மணிக்கு 23 நடை மணல் அள்ளமுடியாது என்றால் தவறு, 23 ந் தேதியே நாங்கள் அள்ளிவிட்டதாக அவர் ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார்.

10. ஒப்புதல் வாக்குமூலத்தில் சுடுகாட்டிற்கு செல்லும் பாதையில் சிமெண்ட் சாலை போடுவதற்கு எனக்கு மணல் தேவைப்படுகிறது என்று கூறி வனப்பாதுகாப்பு பகுதியிலிருந்து மணலை மாட்டு வண்டி மூலம் எடுத்து வந்து கொட்டுவதற்கு என்னை கேட்டார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

11. அந்த சுடுகாட்டு பாதை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பொதுமக்களால் அமைக்கப்படும் பாதையா அல்லது அரசு ஒப்பந்த புள்ளி மூலம் டெண்டர் விடப்பட்டு அதன் மூலம் அமைக்கப்படும் சாலையா என்று விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் அது எனக்கு தேவையற்றது என்பதால் அதை பற்றி விசாரிக்கவில்லை.

12. 23 நடை மாட்டு வண்டிமணலை ஒரே மாட்டு வண்டியில் எடுத்தார்களா அல்லது வேறு வேறு மாட்டு வண்டியில் எடுத்தார்களா என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை, மாட்டு வண்டியை மறைத்து விட்டார்கள். விசாரணை அதிகாரி என்ற முறையில் வழக்கில் தொடர்புடையதாக கூறும் மாட்டு வண்டியில் கைப்பற்ற வேண்டிய கடமை எனக்கு உள்ளது என்றால் மாட்டு வண்டி மறைக்கப்பட்டுவிட்டதால் என்னால் கைப்பற்ற முடியவில்லை.

13. மாட்டு வண்டி மறைக்கப்பட்டுவிட்டதால் கைப்பற்றவில்லை என்ற விவரத்தை எனது விசாரணையில் எங்கேயாவது சொல்லியுள்ளேனா என்றால் படிவம் -அ-ல் காலம்-9 ல் சொல்லப்பட்டுள்ளது. வழக்கில் தொடர்புடைய மணல் வரச்சரகத்தில் தான் அள்ளப்பட்டுள்ளது என்பதற்கு என்ன ஆதாரம் உள்ளது என்றால் எடுக்கப்பட்ட புகைப்படம் நீதிமன்ற கோப்பில் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள புகைப்படம் மணல் கொட்டியிருந்ததற்காக என்றாலும், மணல்

எடுத்ததற்கான இடத்திற்கான புகைப்படத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

14. நான் சொல்லும் புகைப்படங்கள் இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்னதாக எடுக்கப்பட்டு புள்ளிவிவர கணக்கிற்காக ஒரே ஒரு புகைப்பட நகலை, அதுவும் நகலாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும், வழக்கு எதிரி கந்தனுக்கும் எந்த விதசம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. அரசியல் காழ்புணர்ச்சி காரணமாக, மாற்று கட்சியினரின் தூண்டுதல் பெயரில் இவ்வழக்கின் எதிரி மீது பொய்யாக வழக்கு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக படிவம் -அ தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. படிவம் -அ என்னால் எப்போது தயார் செய்யப்பட்டது என்றால் எங்களுடைய அலுவலகத்தில் 21.12.2016 ல் தயார் செய்யப்பட்டது. சம்பவம் நடந்து 11 மாதம் காலதாமதமாக படிவம் -அ தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், மற்ற காப்புகாடுகளை பராமரிப்பது மற்றும் வேலைபளு காரணமாக தாக்கல் செய்ய காலதாமதம் ஏற்பட்டது.

15. படிவம் -அ நீதிமன்றத்திற்கு 02.05.2017 ல் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அதற்கான காலதாமதத்தை என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். காலதாமதமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை

**(Sd/-R.Senthilkumar)**
**D.M-cum-JM,**
**T.V.Nallur.**